# 5 அன்பு செலுத்தி வாழ்வோம்

**அனைத்து உலகுக்கும் செய்தியை அறிவிக்கும் சொல் அன்பு ஆகும். உலகின் அதிபதியான இறைவன் அன்பு நிறைந்தவராக அன்பை உலகுக்கு அருள்கொடையாக அளித்தார். இவ்வாறு வழங்கப்பட்ட அன்பு இறைவனுக்கும் மனிதனுக்கும் மற்றும் மனிதனுக்கும் படைப்புக்கும் தொடர்பை ஏற்படுத்தும் இறை கொடையாகும். இப் பாடத்தில் அவ் அன்பின் பெறுமதியை உறுதிப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**1 கொரிந்தியர் 13, பிலிப்பியர் 2:1-2, எபேசியர் 3:17-19, மாற்கு 12:29-33**

- மனிதனுக்கான இறையன்பு உலக ஆரம்பத்தில் உருவாகியது.
- மனிதனின் கீழ்படியாமை, பேராசை என்பவற்றால் இறை அன்பிலிருந்து விலகி விடும் நிலை ஏற்பட்டது.
- இதனால் மனித உள்ளம் மாசடைந்தது. இருப்பினும் இறைவன் மனிதனிடம் காட்டிய அன்பானது எந்த வகையிலும் குறையவில்லை என்பதைத் திருவிவிலியத்தில் காணலாம்.
- இறையன்பிலிருந்து தூர விலகி சென்று மனிதன் மாசு நிறைந்த நிலைக்கு ஆளாக்கப்பவதற்குரிய காரணிகளை பின்வரும் உருவின் மூலம் நாம் அறிந்து கொள்வோம்.



**பவுல் கொரிந்து வாழ் மக்களுக்கு எழுதிய திருமுத்தில் ‘அன்பு வழிகள்’**

**வாசித்துப் பார்ப்போம்**

## 1. கொரிந்தியர் 13:1-13

நான் மானிடரின் மொழிகளிலும் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும், இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும், மறை பொருள்கள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும், நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும்,

**என்னிடம் அன்பு இல்லையேல்**

ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன். எனக்கு பயன் ஒன்றுமில்லை.

எமது வாழ்வில் எந்த அளவிற்கு அன்பு தேவை என்பதை நாம் தேடிப்பார்ப்போம்.




மேற்குறிப்பிடப்பட்ட பண்புகளுக்கு ஏற்ப ‘அன்பு’ எனும் சொல்லில் ஆழமான பொருள் அடங்கி உள்ளது என்பது வெளிப்படுவதுடன் கிறிஸ்தவ வாழ்வு அன்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.

தற்போது இயேசு அன்பைக் குறித்து கூறிய திருவிவிலியப் பகுதியை பார்ப்போம்.

இலவச விநியோகத்திற்காக

## மாற்கு 12:29-33

இப்பகுதியின் இரு பிரதான பகுதிகள் பின்வருமாறு:

i. **முழு வாழ்விலும் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்தல்**
இதன் பொருளானது நபர் ஒருவர் தனிப்பட்ட வகையில் முழுவதுமாக இறைவனில் அன்புகூர வேண்டும் என்பது இறைவிருப்பம் ஆகும்.

ii. **தன்னில் அன்பு கூர்வதுபோல் பிறரிலும் அன்புகூர்தல்**
முற்காலத்தில் யூத மக்கள் அயலவரிடம் அன்பு காட்டுதல் என்பது தமது மதத்தவரிடம், இனத்தவரிடம் மாத்திரம் அன்பு காட்டுதல் எனக் கருதினர். ஆனால் இயேசு யூத இனத்தவராயினும் அதற்கு புதிய ஒரு வரைவிலக்கணம் அளித்தார். இயேசுவின் போதனைகளுக்கு ஏற்ப தமது அயலவர் என்பது தம்மைச் சூழ வாழும் தேவையில் இருக்கும் யாவரும் என்பது பொருள்படும். அப்படியான அன்புக்கு எல்லையில்லை.

**பவுல் எழுதிய திருமுகம் எபேசியர் 3:17-19**

**நம்பிக்கையின் வழியாக, கிறிஸ்து உங்கள் உள்ளங்களில்**
**குடிகொள்வாராக! அன்பே உங்கள்**
**வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக!**
**இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவுடைய**
**அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து**
**அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்து கொள்ளும்**
**ஆற்றல் பெறுவீர்களாக! அதன் மூலம் கடவுளின் முழு நிறைவையும்**
**நீங்கள் பெற்றுக் கொள்வீர்களாக!**

அன்பின் அடிப்படையில் ஜெபத்துடன் வாழ்வு வலுவடையும்போது தமது வாழ்வு மிக உறுதியாக அமையும் என பவுல் எபேசு மக்களுக்கு எடுத்துக்காட்டினார். அவ்வாறான வாழ்வுக்கு கிறிஸ்துவின் உள்ளத்தில் வாழவும், அன்பில் நிலைத்துநிற்கவும் எமக்கு இறை நம்பிக்கை அவசியம். அதே போன்று தான் ஒருவர் மாத்திரமல்ல, அனைவருடனும் ஒன்றிணைந்து கிறிஸ்துவின் இந்த எல்லையற்ற அன்பை அறிந்து கொள்வது அவசியம். எமது வாழ்வானது அன்பில் வேரூன்றி நிலைத்திருக்கும்போது முழுமையைப் பெறும்.

நாம் எமது வாழ்வில் பல பருவங்களை கடந்து செல்கின்றோம். அதற்கேற்ப வயதுக்கு ஏற்ற அன்பை அனுபவிக்கின்றோம். ஒருவர் குழந்தையாக பிறரின்

அன்பை பெறுவர். நாம் எதிர்பார்க்கும் அன்பும் பிறர் மீது காட்டும் அன்பும் மிகவும் இனியது அதனால் கிடைக்கும் பாதுகாப்புப் பராமரிப்புப் பிள்ளைகளுக்கு இளமைப் பருவம் வரை அத்தியாவசியம். இக் காலத்தில் எம்மைவிட வயதில் கூடிய அனுபவங்கள் பல நிறைந்த வளர்ந்தோர், ஆசிரியர் போன்றவர்களுக்கு நாம் பணிந்து வாழும் நிலை காணப்படும். விசுவாசம் மற்றும் புரிந்து கொள்ளல் என்பவைகளை முன்னுதாரணமாகக் கொண்டு வாழ்வோமானால் வயோதிபர், ஆசிரியர் போன்றோரின் அன்பில் நாம் வெற்றி காணமுடியும் அல்லவா? இவ்வாறான அன்பினால் இளமைக் காலத்தில் நல்வழியில் வாழும் நிலை உருவாகும்.

பாடசாலையின் இனிமையான காலம் இளமைக் காலமாகும். இங்கு தமது தோழர் தோழியரை விட மிக நம்பிக்கை உள்ள ஒருவர் இல்லை எனக் கருதி செயற்படும் அனேகர் உள்ளனர். சம வயதில் இருக்கும் அவர்களுக்கு ஏதாவது பிரச்சனை தோன்றுமானால் அன்பு செயற்பாட்டின் மூலம் நற்பண்புகள் என்பனவற்றை அறிவூட்டல் அவசியம்.

நாம் வாழும் சமூகத்தில், திருஅவையில், குடும்பத்தில் ஆண் - பெண் இருபாலாரும் தொடர்புடன் வாழ்கின்றோம். சமூகத்தில் நாம் வாழ்வதற்கான விதிகளை ஆண்டவர் இயேசு எமக்கு அறிவுறுத்தி உள்ளார். ஆண் பாலாரும் பெண் பாலாரும் அன்பின் பண்பால் ஒருவரையொருவர் கௌரவத்துடன் கவனிக்க வேண்டும்.

இயேசுவின் இறையன்பு இவ்வுலகில் பரம்பிட அன்புடன் நாம் செயற்படுவோம்.

நாம் அர்ப்பணிப்புடன் செயற்படும்போது அன்பு மிகுந்த பொருளுள்ளதாகும். இயேசுவின் வாழ்வு, பணி, துன்புறுதல், மரணம் என்பனவற்றில் தியாக அன்பு ஆழமாக அமைந்துள்ளது. உண்மையான அன்பை உலகுக்கு பரப்பும் நாம் இறையன்புடன் வாழ வேண்டும்.

**செயற்பாடு**

01. ‘கிறிஸ்தவராகிய எமது வாழ்வின் அடிப்படை அன்பு’ இது சார்பாக நீர் கற்ற கருத்துக்கள் மூன்று எழுதுக.

02. தற்காலத்தில் தமது வாழ்வில் அன்பின் அடிப்படையில் வாழ்ந்த இருவரைக் குறிப்பிடுக.